ஊராட்சியில் உள்ள பள்ளி, பழைய கட்டடத்தில் இருப்பதை மாற்றி புதிய கட்டடம் வழங்கிட வேண்டுமென்றும், கடம்பத்தூர் ஒன்றியம், கொண்டஞ்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் வழங்கிட வேண்டுமென்றும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தொடக்கப் பள்ளிகளில் உள்ள கட்டடங்கள் அனைத்தும், உள்ளாட்சித் துறையின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களால் ஒதுக்கப்படும் நிதியைப் பயன்படுத்தி புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு எந்தெந்தப் பள்ளிகளிலெல்லாம், மாணவர்கள் படிக்க இயலாத நிலையில் கட்டடங்கள் பழுதடைந்திருக்கின்றன என்பதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசி, எந்தமாதிரியான முடிவுகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்து அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 273, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

273—

கோட்டப் பொறியாளர் அலுவலகம்

***16236—திரு. சி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியிலுள்ள கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைப் பிரித்து பர்கூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூலை 5]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியில் இருக்கிற கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைப் பிரித்து, பர்கூரில் கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அங்கு 4 உபகோட்டங்கள் இருக்கின்ற காரணத்தால், அது அரசின் செயற்குறிப்பில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற வைர வரிகளை இயேசுபிரான் உலகிற்கு வழங்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) தட்டாமலேயே, கேட்காமலேயே திட்டங்கள் பல தந்து, 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வர வேண்டும்' என்று தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற பாடுபட்டு, தன் வாழ்நாளையே அர்ப்பணித்து மறைந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சோதனைகளை எல்லாம் சாதனைகளாக்கிவரும் சாதனை நாயகன், யாரும் எட்டிப் பிடிக்க முடியாத மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து கழகத்தையும் ஆட்சியையும் வழிநடத்தி வரும் ஐயா மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மின்சாரத் துறையை சிறப்பாக வழிநடத்தி வரும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும், எங்கள் அன்பு அண்ணன் மாவட்ட அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளியில் கோட்டப் பொறியாளர் அலுவலகம் உள்ளது. அந்த அலுவலகம் பர்கூரிலிருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ளது. அவ்வலுவலகத்திற்கு

நேரடியாகச் செல்ல போக்குவரத்து வசதிகள் இல்லாததால், பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, பொதுமக்களின் நலன் கருதி, கருணைகூர்ந்து தமது முடிவை மறுபரிசீலனை செய்து, பர்கூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். சட்ட விதிகளுக்குட்பட்டு 4 உபகோட்டங்கள் இருக்கின்றன. அதற்கு அதிகமாக இருந்தால், அதைப் பிரித்து, மற்றொரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும். ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் வேண்டுமென்றால் 4 உப கோட்டங்கள் இருக்க வேண்டும். அதன்படி இப்போது 4 உப கோட்டங்கள்தான் இருக்கின்றன. அந்த நான்கையும் பிரித்து, மற்றொரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்பது சட்டத்திற்குட்பட்டு முடியாத காரியம் என்பதால்தான், நான் ஏற்கெனவே அவ்வாறு பதிலளித்தேன். இப்போது இருக்கிற போச்சம்பள்ளி, மத்தூர், ஊத்தங்கரை மற்றும் பர்கூர் என்கிற 4 உப கோட்டங்களை உள்ளடக்கித்தான் போச்சம்பள்ளி கோட்டப் பொறியாளர் அலுவலகம் இருக்கின்றது. எதிர்காலத்தில் மின் நுகர்வோர் அதிகரிக்கும்பட்சத்தில், முதலில் உப கோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதற்குப் பின்னர்தான் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், போச்சம்பள்ளி 40 கி.மீ. தொலைவில் இருக்கிறது, போக்குவரத்து வசதி குறைவாக இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி, அங்கு தேவையான போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

2018 ஜூலை 5]

முற்பகல் 10–25

திரு. சி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 4 உப கோட்டங்கள் உள்ள காரணத்தினால், அதைத் தனியாகப் பிரித்து, புதியதாக ஒரு கோட்டம் உருவாக்க முடியாது என்று சொல்கின்ற நிலையில், வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளதால், பர்கூர் உப கோட்டத்தை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளர் அலுவலகத்தோடு இணைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அன்போடு கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பர்கூர் உப கோட்டத்தை கிருஷ்ணகிரியோடு சேர்க்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அப்படி அதனைச் சேர்க்கின்றபோது போச்சம்பள்ளியிலே எண்ணிக்கை குறைந்துவிடும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேச்சிப்பாறை ஊராட்சியில், மலைக் கிராமமாக இருக்கக்கூடிய அன்பு நகர் பகுதியில் 300 வீடுகளுக்கு நீண்ட காலமாக மின்சாரம் கிடைக்காமல் உள்ளது. அங்கு இருக்கக்கூடிய காந்திமதி எஸ்டேட் என்ற ஒரு தனியார் நிறுவனத்திற்கும், மின் வாரியத்திற்கும் ஒரு சிறிய வழக்கு இருக்கிறது. நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவரும், மின்சார வாரியத்தினுடைய மாவட்ட அளவிலான அலுவலர்களும் சந்தித்துப் பேசினால் ஒரே நாளில் அந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்து, அந்த 300 குடும்பங்களுக்கும் நிச்சயமாக மின்சாரம் வழங்க முடியும், அதற்கான முயற்சியை நம்முடைய மாண்புமிகு மின்சாரம்,

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்ற கேள்வியை தங்கள் மூலமாக நான் முன்வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் 110 மலைக் கிராமங்களில் இருக்கின்ற 5,887 வீடுகளுக்கு இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கின்றபோதே சொன்னார்; அங்கே தனியார் estate–க்கும், மின்சார வாரியத்திற்கும் இடையே வழக்கு இருக்கின்றது; அழைத்துப் பேச வேண்டும் என்று. ஏற்கெனவே இதுபோன்ற பகுதிகளுக்கு சூரிய ஒளி மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படிக் கொடுக்கப்படாமல் இருந்தால் நாங்கள் அவர்களை அழைத்துப் பேசுவோம். இப்பொழுது உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அந்த வழக்கிலே கிட்டத்தட்ட 20 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கலாம் என்று ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், வனத் துறையைப் பொறுத்தவரையில், அதற்கு அனுமதி மறுத்துக்கொண்டிருக்கின்றார்கள். காரணம், அங்கே நாம் மின் கம்பங்களை நடுகின்றபோது விலங்குகளுக்குப் பிரச்சினை ஏற்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில் பிரச்சினை என்று நான் சொல்லவில்லை. பொதுவாக, இந்த 5,887 வீடுகளுக்கும் இந்தப் பிரச்சினை இருக்கின்றது. உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணை இருந்தும் வனத் துறை அதற்கு மறுத்துக் கொண்டிருக்கின்றது. வனத் துறையோடு பேசி இப்போது நாங்கள் மின் கம்பங்களை சாலை வழியாகக் கொண்டு செல்கிறோம் என்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு சமாதானப் பெட்டிஷன் போட்டிருக்கின்றோம். அந்தவகையில் இப்பொழுது 10, 12 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்குண்டான ஆணையைப் பெற்றிருக்கின்றோம். அதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த எஸ்டேட்டில் இருக்கின்ற மின் வாரிய அதிகாரிகளோடு பேசி, மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் பேசி, அந்தத் தனியார் எஸ்டேட்டிடமும் பேசி அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கை. அதில் மாற்றுக்

2018 ஜூலை 5]

கொள்கை கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கைதான். உரியவர்களை அழைத்துப் பேசி அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 274, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

274—

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கட்டடம்

***37894—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பழைய அலுவலகக் கட்டடத்திற்குப் பதிலாக புதிய அலுவலகக் கட்டடம் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நடப்பாண்டில் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*